# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2021.09.27ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**தஸ்ஸனா பௌத்த சன்விதானயவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சந்திம வீரக்கொடி
அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 24.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**தஸ்ஸனா பௌத்த சன்விதானய**
**(கூட்டிணைத்தல்)**

## தஸ்ஸனா பௌத்த சன்விதானயவைக் கூட்டிணைப்பதற்கான ஒரு சட்டம்

''தஸ்ஸனா பௌத்த சன்விதானய'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒழுங்கமைப்பொன்று, அதன் உறுப்பினர் களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட ஒழுங்கமைப்புடன் தொடர்புபட்ட அதன் குறிக்கோள் களை பயனுற நிறைவேற்றும் மற்றும் எல்லாக் கருமங்களைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்: முன்னுரை

அத்துடன், சொல்லப்பட்ட ஒழுங்கமைப்பு எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப் பித்துள்ளதாதலாலும் மற்றும் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''சங்விதானய'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) தஸ்ஸனா பௌத்த சன்விதானயவின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைத்துரு வாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் ''கூட்டிணைக்கப்பட்ட குழு'' எனக் குறிப்பீடு செயயப்படும்) ''தஸ்ஸனா பௌத்த சன்விதானய'' என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறா வழியுரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும், அத்துடன் தஸ்ஸனா பௌத்த சன்விதானய வைக் கூட்டிணைத்தல்

அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** கூட்டிணைக்கப்பட்ட குழு அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) சதர சதிபதாண தியான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தலும் நடாத்துதலும்;

(ஆ) தேரவாத பௌத்த சமயத்தின் செய்தியை சமுகத்தில் பரப்புதலும், மனத்தூய்மைக்கான செயற்பாடும்;

(இ) பெபலாகம ரஜமஹா நாலேன் விகாரையின் வதிவிட நிலை பிக்குகள், தச சில் மாதாக்கள், உபாசகாக்கள் மற்றும் உபாசிகாக்களுக்கு தானம் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(ஈ) தேரவாத பௌத்த சமயத்தினை பாதுகாக்கும் நோக்குடன் தோதான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற் பாடுகளை ஒழுங்கு செய்தல்.

அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத் தினது பணியுடன் முரண்பாடில்லாதிருப்பதனைக் கூட்டிணைக்கப் பட்ட குழு உறுதிப் படுத்துதல்

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிக்கும், அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்

**5**. *(1)* இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையவும் மற்றும் 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமையவும், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களின் முகாமையும் நிருவாகமும், பெபலாகம நகலேன் ரஜமஹா விகாரையின் வதிவிட பிக்குவான தலைவர், இரண்டு தலைவர்கள், செயலாளர், பொருளாளர் மற்றும் 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்யப் பட்டவர்களான பதவிதாங்குநர்களான அத்தகைய எண்ணிக்கை யினரைக் கொண்ட நிறைவேற்றுச் சபையினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற ஒழுங்கமைப்பின் நிறைவேற்று சபையின் உறுப்பினர்கள் 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் முதலாவது சபை நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலப் பேரவை ஒன்றாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) இடைக்காலச் சபையானது பேரவையானது கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இடைக்கால நிருவாகத்திற்கானவையும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது நிறைவேற்று சபையின் உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கப்படுவதற்கானவையும் அல்லது நியமிக்கப்படுவதற்கானவையும் விதிகளை ஆக்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) இடைக்கால சபையின் ஏதேனும் முடிபானது ஏதேனும் கூட்டத்திற்கு சமுகமளித்திருக்கும் அதன் உறுப்பினர்களின் பெரும்பான்மையோரால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது நிறைவேற்று சபையானது இச்சட்டம் தொடங்கின்ற தேதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) நிறைவேற்று சபையின் பதவிதாங்குநர் ஒவ்வொருவரும் ஓராண்டு காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர் போசகர் அல்லது மதியுரைநர் சொல்லப்பட்ட ஓராண்டு காலப்பகுதி கழிந்த பின்னர் மீள்நியமனத்துக்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநர் ஒருவரின் இறப்பு, பதவிவிலகுதல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், நிறைவேற்று சபை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள், எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

போசகர்

**6**. பெபலாகம நகலேன் ரஜமஹா விகாரையின் பிரதான பொறுப்பாளர் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் தொடர்பில் நிறைவேற்று சபைக்கு ஆலோசனை வழங்குவதற்காக போசகரொருவராதல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குழுக்கள்

**7**. ஒன்பதாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க, நிறைவேற்று சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களைக் கொண்ட ஏதேனும் குழு அல்லது உபகுழு நியமிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்கள்

**8**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும், வாடகைக்கு எடுக்கவும், நிர்மாணிக்கவும், புனரமைக்கவும் மற்றும் வேறுவகையாகப் பெற்றுக்கொள்ளவும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதென நிறைவேற்று சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அவற்றைக் கையாளவும் அல்லது கையுதிர்க்கவும்;

(ஆ) பிணைப்பொறுப்புக்களுடனோ அல்லது பிணைப் பொறுப்புக்களின்றியோ நிதிகளைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெற்றுக் கொள்ளுவதற்கும்:

ஆயின், நிறைவேற்று சபையானது, கூட்டிணைக்கப் பட்ட குழுவிற்கு செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை நிறைவேற்று சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதலும், அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகளை அவர்களுக்குச் செலுத்துதலும்;

(உ) நிறைவேற்று சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான ஏதேனும் வங்கியில் ஏதேனும் நடைமுறை, சேமிப்பு அல்லது வேறு ஏதேனும் கணக்கினை திறத்தல், தொழிற்படுத்துதல் மற்றும் மூடுதல்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந் தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அதன் சார்பில் நேரடியாகவாயினுஞ்சரி அலலது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினூடாகவாயினுஞ்சரி அல்லது முகவரினூடாகவாயினுஞ்சரி செய்து கொள்வதற்கும் மற்றும் புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும்;

(எ) நிறைவேற்று சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவையேனும் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானபோது ஏதேனும் குழு அல்லது உபகுழுவினை நியமித்தல்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக தேவைப்படுகின்ற நிதிகளை கடன் வாங்குதல் அல்லது திரட்டுதல்; அத்துடன்

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை செயற்றிறன் மிக்கதாகவும் நிறைவேற்றுவதற்கு அவசிய மான அல்லது உசிதமான ஏனைய அனைத்து விடயங் களையும் செய்தல்;

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்*

**9**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்ட மொன்றில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மையொன்றினால் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத் தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை, காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும் மற்றும் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பினர்கள் விலகுதலும் அல்லது அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியிலிருந்து நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும்;

(ஆ) நிறைவேற்று சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களின் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் மற்றும் படிகள்;

(ஈ) நிறைவேற்று சபையின் கூட்டங்களைக் கூட்டுவதற்காகவும் அதனை நடாத்துவதற்காகவும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(உ) அதன் நிறைவேற்று சபையின் அல்லது வேறு ஏதேனும் குழுவின் அல்லது உபகுழுவின் உறுப்பினராக இருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிர்வாகமும் முகாமையும்; அத்துடன்

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுவான அலுவல்களின் முகாமையும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட சகல விதி, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப் பட்டதைப் போன்று அதேபோன்ற கூட்டமொன்றிலும் மற்றும் அதே போன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப் படலாம்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு அமைந் தோராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக் கப்பட்ட குழுவின் நிதியம்

**10.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், நிறைவேற்று சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களை யும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செல வினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்

**11.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையில் அதற்கு உரித்தாகவரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை

எடுப்பதற்கும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 9 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்ப்பதற்கான தத்துவத்துடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

**பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்**

**12**. எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும், பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

**கணக்குகளும் கணக்காய்வும்**

**13**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு, அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்றவொரு கணக்காய்வாளரொருவரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது-

(அ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின்

பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக்கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு ஒரு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

வருடாந்த அறிக்கை

**14.** (1) நிறைவேற்றுசபை ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து புத்த சாசனம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

நிறுவகத்திற்கு வருமதி யானவையும் நிறுவகத்திற்கு செலுத்தப்படற் பாலவையுமான தனிசுகள்

**15**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாயிருக்கும் நிறுவகத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக் களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிறுவகத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப் படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை

**16**. *(1)* கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை அத்தகைய நிறைவேற்று சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நிறைவேற்று சபையின் செயலாளர் அல்லது வேறு ஏதேனும் பதவி தாங்குநரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

*(2)* கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான ஏதேனும் சாசனத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்ப மிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடு தலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

கலைப்பின்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்

**17**. *(1)* கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர் களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை யுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசின் உரிமைகளைப் பேணல்

**18**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளை அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப் பட்ட குழுவின் உரிமைகளை பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**19**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.